மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஐ.டி.ஏ. ஸ்கீம், ஏ.ஆர்.சி. ஸ்கீம் படியும் சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படியும் மத்திய சர்க்கார் நிலநீர் ஆராய்ச்சித் துறையினர் சொல்கிறபடியும் விஸ்தீரணம் தகுந்தவாறு இருந்தால் கடன் கொடுக்கப்படுகிறது.

திரு. சி. ஆறுமுகம் : முன்பு இருந்த ஸ்கீம் நார்மல் ஸ்கீமாக இருந்தது. இப்பொழுது ஐ.டி.ஏ. ஸ்கீம், ஏ.ஆர்.சி. ஸ்கீம் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். இதனால் ஒன்றிரண்டு ஏக்கர் வைத்திருக்கின்றவர்களுக்கு வசதிகள் கிடைப்பதில்லை. அது மட்டுமல்ல, கடலோரப் பகுதிகளிலே 6 மைல்களுக்கு அப்பால் உள்ள கிணறுகளுக்குத்தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். எங்கள் பகுதியிலே கடலோரப் பகுதிகளிலேகூட நல்ல நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. எனவே அந்த விதிமுறையைத் தளர்த்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஐ.டி.ஏ. ஸ்கீம், ஏ.ஆர்.சி. ஸ்கீம் வந்த பிறகு சில இடங்களில் பாதிக்கப்படுகின்றது என்று பேசப்படுகிறது. பாதிக்கப்படாத அளவில் இப்பொழுது நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

Milk Powder Plant.

* 48 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Dairy Development Corporation have proposals under consideration to start a skimmed Milk Powder Plant in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், மதுரையில் பால் மாவுத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. நாளொன்றுக்கு 10 டன் பால் மாவு உற்பத்தி செய்யும் திறனுடையதாய் இத் தொழிற்சாலை அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நாளொன்றுக்கு 1,00,000 லிட்டர் பால் தயாரிக்க இயலும். வட மாவட்டமொன்றில் இதைப்

1973 ஆகஸ்ட் 6]

போன்றதொரு பால் மாவுத் தொழிற்சாலை அமைக்கவும் தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகத்திடம் செயற்குறிப்புகள் உள்ளன. இந்தத் தொழிற்சாலை பற்றிய விவரங்கள் இன்னும் தயாரிக்கப் படவில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, எப்பொழுது அது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த பால் பவுடர் தொழிற் சாலை மதுரையிலே உள்ள பால்பண்ணையிலே இப்பொழுது அமைக்கப்படுகிறது. சுமார் ஓர் ஆண்டுக் காலத்திற்குள் அதனுடைய வேலை முடியும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே ஆரம்பிக்கப்படக்கூடிய அந்தத் தொழிற்சாலைக்கு எவ்வளவு மூலதனம் போடப் போகிறார்கள்? அது இப்பொழுது இருக்கிற மில்க் புராஜக்ட்க்குப் பக்கத்தில் துவக்கப்படுமா அல்லது வேறு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தற்போதுள்ள பால் பண்ணைக்கு அருகிலே அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட இருக் கிறது. தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக்கழகத்தின் மூலம் 21 லட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் அமைக்கப்பட இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இன்றைக்கு மதுரையிலே உள்ள பால்பண்ணையிலே அதனுடைய கெப்பாசிடி அளவுக்கு உற்பத்தியாகாமல் இருக்கிறதே, அந்த அளவிற்கு உற்பத்திசெய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தற்போதுள்ள உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், இந்தத் தொழிற்சாலை ஏற்படும் நிலையில் அன்றாடத் தேவையான 1 லட்சம் லிட்டர் பால் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையிலேயும் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. ஆப்பரேஷன் ப்ளட் ஸ்கீம் என்ற அடிப்படையிலே மாடுகளை நல்ல முறையிலே வளர்ப்பதற்கான திட்டம் தயாரிக்கப் பட்டு வருகிறது.